**சனாதிபதி நிதியம் - 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சனாதிபதி நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதியத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியம இலக்கம் 01 இன் 71 ஆம் பந்தியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய சொத்துக்கள் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வெளிக்காட்டப்படல் வேண்டும். நிதியத்திற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 129 மில்லியனில் மிகுதி 12 மாத | எதிர்வரும் வருடங்களில் சரியாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காலப் பகுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 12 மில்லியன் நடைமுறைச் சொத்துக்களாக மற்றும் மிகுதி ரூபா 117 மில்லியன் நிதியல்லாச் சொத்துக்களாக வேறு வேறாக காட்டப்படுவதற்குப் பதிலாக மொத்தப் பெற வேண்டிய தொகையும் நடைமுறைச் சொத்துக்களாக காட்டப்பட்டிருந்தது.

**1.5.2 கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் நிதியத்தின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் அபிவிருத்தி லொத்தர் சபையில் செய்யப்பட்டிருந்த ரூபா 2,200,000 ஆன முதலீடுகள் காட்டப்பட்டிருந்தன. அம் முதலீடுகள் மதிப்பீடு செய்யப்பட்ட அடிப்படையானது கணக்கீட்டுக் கொள்கைகயில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | சனாதிபதி நிதியத்தின் நிதித் தளத்தை வலுப்படுத்தும் நோக்கில் சனாதிபதி நிதியம் மற்றும் மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்துடன் ஒன்றிணைந்து தலா ரூபா 2,200,000.00 முதலீட்டில் 1983 ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபை நிறுவப்பட்டுள்ளது. 1997 இன் 20 ஆம் இலக்க அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 11(1)(ஆ) மற்றும் 17(5) பிரிவுகளில் சனாதிபதி நிதியத்திற்கு அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து பணம் செலவு வைக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அபிவிருத்தி லொத்தர் சபையினால் மாதாந்தம் இலாபப் பங்கை சனாதிபதி நிதியத்திற்கு வழங்குகின்றது. | குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் கணக்கீட்டுக் கொள்கைகளில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்காக நிதியத்தில் ரூபா 300,000 ஆன நிலையான வைப்பு கணக்கொன்று திறக்கப்பட்டு அதன் மூலம் பெறப்பட்டுகின்ற வட்டி மாதாந்தம் ரூபா 1,500 அதிகபட்சமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக அவர்களுக்கு 18 வயது | இந்த நிலையான வைப்பு நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படுவதற்கு தவறவிடப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் அது சரி செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ் வைப்புக்களின் வட்டி நேரடியாக பயனாளிகளின் | நிதிக் கூற்றுக்கள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்தியடையும் வரை செலுத்துமாறு வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மீளாய்வாண்டிற்காக அவ் வைப்புக்களில் ரூபா 26,908 ஆன வட்டியொன்று பெறப்பட்டிருந்ததுடன் அந்த முழுமையான வட்டியும் மாணவருக்கு வங்கியினால் செலுத்தப்பட்டிருந்தது. வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் அம்மாணவர்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 18,000 செலுத்த வேண்டி இருந்த போதிலும், அந்த எல்லை ரூபா 8,908 ஆல் விஞ்சப்பட்டு ரூபா 26,908 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் நிதியத்தின் பேரில் காணப்படுகின்ற இந்நிலையான வைப்பு நிதியத்தில் சொத்துக்களாக மீளாய்வாண்டின் வட்டி வருமானம் ரூபா 26,908 ஆன வருமானமொன்றாக மற்றும் அதில் செய்யப்பட்டிருந்த கொடுப்பனவுகள் செலவொன்றாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதால் அது சனாதிபதி நிதியத்தின் வட்டி வருமானமாகவும் அதன் பின்னர் புலமைப்பரிசில் உதவித் தொகை செலவாகவும் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் வெளிநாட்டு மருத்துவமனையில் ஏற்பட்ட மருத்துவச் செலவுகள் தீர்க்கப்பட்டிருந்தமை நிதியத்தின் செலவினமொன்றாக கணக்கிடப்பட்டுள்ளதுடன் வழங்கப்பட்டிருந்த ரூபா 6,083,244 ஆன காசோலைகள் 2021 திசெம்பர் 15 வரையில் செயலாளர், வெளிநாட்டு உறவுகள் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இக்காரணத்தினால் மீளாய்வாண்டின் மருத்துவ உதவிச் செலவுகள் அந்த அளவினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | இந்த காசோலைகளுக்கான கோவைகளின் நடவடிக்கை பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் காசோலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் சரி செய்யப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தின் 6 ஆவது பந்தி | நிதியத்திற்குச் சொந்தமான நிதி, சபையினால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் பிரகாரம் சனாதிபதியின் ஏற்பாடுகளின் கீழ் பயன்படுத்தப்பட முடியுமான போதிலும், 2019 ஒக்டோபரிலிருந்து திசெம்பர் 31 வரை செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 659,287,255 மற்றும் 2020 சனவரி 01 இலிருந்து 2020 திசெம்பர் 31 வரை செலவிடப்பட்ட மொத்தம் ரூபா 1,889,195,017 என்பவற்றுக்காக 2021 திசெம்பர் 15 வரையில் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஒக்தோபர் 01 இலிருந்து 2019 திசெம்பர் 31 வரை மற்றும் 2020 சனவரி 01 இலிருந்து 2020 திசெம்பர் 31 வரை சனாதிபதி நிதியத்தில் செய்யப்பட்டிருந்த அனைத்து கொடுப்பனவுகளும் அதிமேதகு சனாதிபதியின் அங்கீகாரம் பெறப்பட்டு செய்யப்பட்டுள்ளது. 2019.10.18 இன் பின்னர் சனாதிபதி நிதியத்தின் ஆளுனர் சபைக் கூட்டமொன்று நடாத்தப்படாததுடன் நிலவிய கொவிட் தொற்று நிலைமையின் கீழ் ஆளுநர் சபைக் கூட்டம் நடாத்தப்படுவதற்கான திகதியொன்றை திட்டமிடுவதற்கு சிக்கலாக இருந்தது. எதிர்காலத்தில் நடாத்தப்படுகின்ற ஆளுநர் சபைக் கூட்டத்தில் இக்காலப்பகுதிக்கான அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் உங்களுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை தெரிவிக்கின்றேன். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | 2021 ஒக்தோபர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் 2020 மார்ச் 12 இலிருந்து 2020 நவம்பர் 11 வரையில் மொத்தம் | 2021 ஆம் ஆண்டிற்குள் இக்காசோலைகள் தொடர்பாக நி.பி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 11,507,044 ஆன வழங்கப்பட்டும் ஆனால் சமர்ப்பிக்கப்படாத 12 காசோலைகள் காணப்பட்டன. அந்த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் 2021 ஒக்தோபர் 31 வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (இ) | 2018 இன் யூலை 26 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிதியத்தினால் இலங்கை மத்திய வங்கியில் காணப்பட்டு வருகின்ற 51204 (46078) ஆம் இலக்க வங்கிக் கணக்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் செயலற்ற நிலையில் பேணப்பட்டு வருவதுடன் அது தொடர்பாக நிதியத்தினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அதிமேதகு சனாதிபதி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விசேட செயற்திட்டங்களுக்கு நிதி திரட்டுதல் மற்றும் கொடுப்பனவு செய்தல் போன்ற விசேட சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்காக 51204 ஆம் இலக்க கணக்கு பேணப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,338,345,661 மிகையாக இருந்ததுடன், அதற்கொத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 615,388,704 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 722,956,957 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா 270,753,303 ஆல் அதிகரித்தமை மற்றும் செலவுகள் ரூபா 451,475,888 ஆல் குறைவடைந்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிதியத்தினால் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளுக்காக மொத்தம் ரூபா 331 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் முன்னைய வருடத்தில் அதற்காக ரூபா 1,019 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் ரூபா 688 மில்லியனால் அதாவது 68 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் இதயஅறுவைச் சிகிட்சை, புற்றுநோய் மூளை தொடர்பான நோய்கள், முழங்கால் மற்றும் இடுப்பு நோய்கள், சிறுநீரக நோய் மற்றும் ஏனைய சிகிட்சைகளுக்காக 5407 நோயாளர் மருத்துவ உதவிக்காக விண்ணப்பித்திருந்த போதிலும், 1914 நோயாளர்களுக்கு மட்டுமே மருத்துவ உதவிகள் செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய வருடத்தில் மருத்துவ உதவிகளாக 6386 நோயாளர்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மருத்துவ உதவிகள் செலுத்தப்பட்ட

நோயாளர்களின் எண்ணிக்கை 4472 ஆல் அதாவது 70 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட்ட நோயாளர்களினால் பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கோவைகள் தொடர்பான மிகுதி நடவடிக்கைகள் செய்யப்படுவதற்குத் தேவையான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகள் தவறியிருந்தமை அல்லது தாமதமானவை மற்றும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 1 வருடம் தொடக்கம் 2 வருடங்கள் 3 மாதங்கள் வரையான காலதாமதத்தின் பின்னர் மொத்தம் 3,364,482 ஆன மருத்துவ உதவிகள் மீளாய்வாண்டில் 23 நோயாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கோவைகள் தொடர்பான மிகுதி நடவடிக்கைகள் செய்யப்படுவதற்காக தேவையான தகவல்கள் அதாவது சம்பள அறிக்கை, வங்கிக் கணக்கு விபரங்கள் போன்றன கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகள் தவறியிருந்தமை அல்லது தாமதமான காரணத்தினால் கொடுப்பனவு நடவடிக்கைகள் தாமதமாகின. அத்துடன் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் அலுவலகம் மூடப்பட்டமை மற்றும் குறைந்தளவிலான ஊழியர்களின் மூலம் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை போன்றன இதற்கான காரணங்களாக இருந்தன. | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் 23 நோயாளர்களுக்கு மொத்தம் ரூபா 3,774,000 ஆன மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த துடன் நோயாளர்களினால் அதற்கான மருத்துவப் பற்றுச்சீட்டொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. நோயாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த | சனாதிபதி நிதியத்தின் மூலம் மருத்துவ உதவி வழங்கப்படும் போது வருமானம் கருத்திற் கொள்ளப்படுவதுடன் அதற்காக நோயாளிகள் உட்பட குடும்ப உறுப்பினர்களின் அனைத்து வங்கிக் கணக்கு விபரங்களும் பரீட்சிக்கப்படுவதால் நோயாளிகளினால் கொடுப்பனவிற்காக | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கி கணக்கு உட்பட விபரங்கள் அவர்களின் விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டிருந்த விபரங்களுடன் இனங்காமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்களில் மீண்டும் வங்கி கணக்கு விபரங்கள் பரீட்சிக்கப்படும். | |
| (இ) | முன்னைய வருடத்தின் திசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய மொத்த மருத்துவ உதவிகளின் பெறுமதி ரூபா 8,125,522 என்பதுடன் மீளாய்வாண்டில் அது ரூபா 59,194,859 ஆகும். அதன் பிரகாரம் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிதியத்தின் செலுத்த வேண்டிய மொத்த மருத்துவ உதவிகளின் பெறுமதி 629 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | கோவைகள் தொடர்பான மிகுதி நடவடிக்கைகள் செய்யப்படுவதற்காக தேவையான தகவல்கள் அதாவது சம்பள அறிக்கை, வங்கிக் கணக்கு விபரங்கள் போன்றன கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் அத்தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பதாரிகள் தவறியிருந்தமை அல்லது தாமதமான காரணத்தினால் கொடுப்பனவு நடவடிக்கைகள் தாமதமாகின. அத்துடன் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் காணப்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் அலுவலகம் மூடப்பட்டமை மற்றும் குறைந்தளவிலான ஊழியர்களின் மூலம் அலுவலக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை போன்றன இதற்கான காரணங்களாக இருந்தன. | மருத்துவ உதவிக் கொடுப்பனவுகள் விரைவு படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான மொத்தம் ரூபா 21.25 மில்லியன் ஆன எதிர்பார்க்கப்பட்ட செலவுகளுடன் 09 செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் கைக்கெட்டிய முன்னேற்றம் குறிப்பிடப்பட வேண்டிய வருடாந்த | சனாதிபதி அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | செயலாற்றல் குறிப்பிடப்பட்டு வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றல் அறிக்கை 2021 திசெம்பர் 15 வரையில் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | அபிவிருத்தி லொத்தர் சபைச் சட்டத்தின் 11(ஆ) பிரிவுகள் பிரகாரம் லொத்தர் நடாத்தப்படுவதனால் கிடைக்கின்ற பணத்தில், லொத்தர் சபையின் செலவுகள் செய்யப்பட்டதன் பின்னர் மிகுதி சனாதிபதி நிதியத்திற்கு திருப்பினுப்பப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான ரூபா 685,860,083 ஆன பணம் அபிவிருத்தி லொத்தர் சபையினால் திருப்பியனுப்பப்படும்போது 20 நாட்கள் தொடக்கம் 287 நாட்கள் வரையான கால தாமதமொன்று அவதானிக்கப்பட்டது. | இறுதிப் புள்ளி விபரங்களின் சரியான தன்மை உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் வருடத்திற்கான இறுதிப் பணம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. | நிதியை விரைவாகப் பெற்றுக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் மாதத்தில் நிதியத்தின் 40 ஆம் வருட நிறைவைக் குறிப்பிடும் வகையில் ஆளுநர் சபையினால் கஷ்டப் பிரதேச மற்றும் குறைந்தளவு வசதிகளைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட 12 அரச மருத்துவமனைகளுக்கு ரூபா 437.81 மில்லியன் ஆன மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படுவதற்கு 2019 ஒக்தோபர் 11 இல் விசேட செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 90.71 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்களுக்கான பற்றுச்சீட்டுக்கள் மீளாய்வாண்டில் நிதியத்தினால் தீர்க்கப்பட்டிருந்தது. நிதியத்தின் 42 ஆம் வருட நிறைவு விழாவும் நெருங்கி விட்ட போதிலும் 2021 திசெம்பர் 15 வரையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள விசேட செயற்திட்டத்தின் மிகுதி ரூபா 347.1 மில்லியனுக்கான மருத்துவ உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 90,706,000 ஆன கொடுப்பனவுகள் மற்றும் அதற்கான முன்னேற்றம் எதிர்காலத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஆளுநர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் செய்யப்படுவதற்காக ஆளுநர் சபையால் அங்கீகாரம் பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | விசேட செயற்திட்டம் விரைவில் செயற்படுத்தப் பட வேண்டும். |